

2022

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
Annual Performance Report

බහුකාර්ය සංවර්ධන කාර්ය සාධක බලකා දෙපාර්තමේන්තුව

பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்

Department of Multipurpose Development Task Force


வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2022

பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்

இல: 146, காலி வீதி,
கொழும்பு 03

கௌரவ அமைச்சரின் ஆசிச்செய்தி



பெருந்தொகையான சவால்களுக்கு மத்தியில் ஒரு நாடு என்ற வகையில் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து மக்கள் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்காக அயராது முயற்சி செய்த ஒரு ஆண்டாக 2022 ஆம் ஆண்டைக் குறிப்பிட முடியும். பல்வேறுபட்ட பாரிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக ஒரு அரசாங்கம் என்ற வகையில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்ட ஒரு ஆண்டாகும் என கடந்த வருடத்தைக் குறிப்பிடுவதும் பொருத்தமானதாகும். அந்தத் தீர்மானங்களின் சிறந்த பெறுபேறுகளை ஒரு நாடு என்ற வகையில் இன்று நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

அந்தச் சவால்மிக்க இலக்கை அடைவதற்காக நாமும் கிராமிய புனர்வாழ்வு மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான ஒருங்கிணைந்த பல்துறை நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்து இந்தச் சவால்மிக்க சந்தர்ப்பத்தில் தனது பொறுப்புச் சட்டகத்திற்கு அப்பால் சென்று பணியை நிறைவேற்றியதை இங்கு குறிப்பிடுவது பொறுத்தமாகும்.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்ற வகையில் பெருமளவான துறைகளில் பரந்துள்ள நிரல் அமைச்சின் கீழ், பொது மக்களுக்கான சேவைகளை இலகுபடுத்தும் நோக்கிலேயே உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சு என இரண்டு இராஜாங்க அமைச்சுக்கள் நிறுவப்பட்டுள்ளன. அரசகரும மொழி திணைக்களம், ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், இலங்கை உள்ளூராட்சி நிறுவனம், அரசகரும மொழிகள் ஆணைக்குழு, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்திச் சபை, தொலைக் கல்வி நிலையம், அரச சேவை பரஸ்பர நலவுதவிச் சங்கம் ஆகிய நிறுவனங்கள் வருடத்தில் தமது பொறுப்புக்களை மிகச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு வழங்கிய பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

எவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுத்த போதிலும், தரமான அரச சேவையினைப் பேணி வருவதற்கான பதவியுயர்வு முறைகள் 2022 ஆம் ஆண்டில் எமது அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் திறன் விருத்தி நிகழ்ச்சிகளில் புலப்படத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களுக்குச் செல்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை ஒரு முக்கிய அம்சமாகும். மேலும் பிராந்திய நிர்வாகத்தைப் பலப்படுத்துவதற்கான பல்வேறு நிகழ்ச்சிகளும் உள்ளூராட்சித் துறையின் மேம்பாட்டுக்கான நிகழ்ச்சிகளும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு ஆண்டாக சென்ற வருடத்தைக் குறிப்பிட முடியும்.

இந்தச் செயற்பாடுகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இந்த அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சர்கள், செயலாளர், ஊழியர் குழாம், நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த ஊழியர் குழாத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறேன்.

தினேஷ் குணவர்தன,
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம மந்திரி,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் ஆசிச் செய்தி



நாடளாவிய சேவைகள் மற்றும் இணைந்த சேவைகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த அரச சேவையிலும் திறன் விருத்தியை ஏற்படுத்தி நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி பொது மக்களுக்கு உன்னதமான சேவையினை தேசிய, மாகாண, பிரதேச மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக வழங்குவது இந்த அமைச்சின் முன்னுரிமைச் செயற்பாடாகும். எனினும், கடந்த சில வருடங்களாக நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக உலகின் அனைத்து நாடுகளையும் போன்று இலங்கையிலும் அரச மற்றும் தனியார் துறைகள் கடுமையான பின்னடைவை எதிர்நோக்கியமை அனைவரும் அறிந்ததே. அதன் தொடர்ச்சியாக ஏற்றுமதி குறைவடைந்தமை,டொலர் கையிருப்பு குறைந்தமை, ரூபாவின் பெறுமதி குறைவடைந்தமை, பணவீக்கம் அதிகரித்தமை, நிர்மாணத் துறை வீழ்ச்சியடைந்தமை, தொழில்களை இழந்தமை, ஆட்சேர்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டமை போன்ற சவால்களுக்கு அரசாங்கம் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதன் விளைவாக மூலதனச் செலவினங்களையும் அரச செலவினங்களையும் குறைத்து கடுமையான நிதி முகாமைத்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டி ஏற்பட்டது. அத்தகைய கொள்கைச் சட்டகத்தினுள் இந்த அமைச்சின் பணிகள் அரச கொள்கைகளுக்கு இணங்க முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்குபடுத்தி நிகழ்ச்சிகள் 2022 ஆம் ஆண்டில் நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அதற்கிணங்க அரசாங்க முதலீட்டு மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களின் அபிவிருத்திச் செயற்திட்டங்கள், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சமூக உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், சிரேஷ்ட பிரசைகளுக்கான ஓய்வூதியங்களைத் தொடர்ச்சியாகச் செலுத்துதல், அவர்களின் பொருளாதாரத்தையும் நலனோம்பலையும் மேம்படுத்துதல், பாராளுமன்றம் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலும் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல், மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக மக்களின் நலனுக்காகச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாகப் செய்தல், உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல், என்பன மேற்கொள்ளப்பட்ட முன்னுரிமைச் செயற்பாடுகளில் சிலவாகும். மேலும் 2022 ஆம் ஆண்டிற்காக பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளும் நிதிகளும் பயனுறுதிவாய்ந்ததாகவும் வினைத்திறனுடனும் வருடத்தின் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அமைச்சின் மேற்குறித்த பணியைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்கிய கௌரவ பிரதம மந்திரி மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்களுக்கும், இராஜாங்க அமைச்சர்கள் இருவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளைச் சிறப்பாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மேலதிக செயலாளர்கள், பணிப்பாளர் நாயகங்கள், சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள், பணிப்பாளர்கள், பிரதான நிதி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த ஊழியர் குழாத்திற்கும், இந்த அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட ஊழியர் குழாத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்காலச் செயற்பாடுகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு உங்கள் அர்ப்பணிப்பையும் பங்களிப்பையும் தொடர்ந்தும் எதிர்பார்ப்பதுடன் 2022 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கைக்கும் கணக்கு அறிக்கைக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

கே.டி.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பொருளடக்கம்

பக்கம்

01. அத்தியாயம் - நிறுவனக் கட்டமைப்பு 5
1.1 அறிமுகம் 5
1.2 தூரநோக்கு 6
1.3 பணிக்கூற்று 6
1.4 நோக்கம் 6
1.5 பிரதான பணிகள் 7
1.6 நிறுவனக் கட்டமைப்பு 8
1.7 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் 8
02. அத்தியாயம் - முன்னேற்றமும் எதிர்கால நோக்குகள் 9
2.1 விசேட அடைவுகள், சவால்கள் முன்னேற்றமும் எதிர்கால இலக்குகளும் 9
03. அத்தியாயம் - 2022 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முழுமையான நிதிச் செயலாற்றுகை. 16
04. ஆம் அத்தியாயம் - செயலாற்றுகை சுட்டிகள் 33
05. ஆம் அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி நோக்குகள 34
06. ஆம் அத்தியாயம் - சவால்கள் 35
07. ஆம் அத்தியாயம் - மனித வள ஆற்றல்கள 35
08. ஆம் அத்தியாயம் - இணக்க அறிக்கை 35

01. அத்தியாயம் - நிறுவனக் கட்டமைப்பு

1.1 அறிமுகம்

நாட்டின் சுபீட்சமானது, அங்கு வாழும் பிரஜைகளின் அறிவு, திறன் மற்றும் செயற்றிறன் போன்றவற்றின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. அதனால், தொழில் சந்தையின் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் திறன்களுடன் கூடிய ஒழுக்கமுள்ள மற்றும் திருப்திகரமான உழைப்புப் படையை உருவாக்கும் நோக்கில் குறைந்தமட்ட கல்வித் தகமைகளுடைய, குறைந்த வருமானம் கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு முறைசார்ந்த வகையிலான தொழிற் பயிற்சியை வழங்கி அவர்களை தேசிய பொருளாதாரத்திலும் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்களாகவும் உருவாக்கும் நோக்கில் பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது.

2019 டிசம்பர் மாதம் 19 ஆம் திகதிய அமைச்சரவையின் PS/SP/SEC/CabP குறிப்புக்கமைய வெளியிடப்பட்டுள்ள 2019 டிசம்பர் மாதம் 19 ஆம் திகதிய 19/3388/201/004 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட "பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்" 2020 ஜனவரி மாதம் 15 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் விடயதானத்தின் கீழ் தாபிக்கப்பட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், 2020 நவம்பர் மாதம் 20 ஆம் திகதிய 2202/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இத்திணைக்களம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் விடயதானத்தின் கீழ் இணைக்கப்பட்டது. அத்துடன், 2021 யூலை மாதம் 29 ஆம் திகதிய 2238/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மீண்டும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அத்துடன், 2311/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இத்திணைக்களம் அரச பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் விடயதானத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. மேலும் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 2/2020 இற்கமைய அரச சேவையில் ஆரம்பநிலை சேவைகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவது நிறுத்தப்பட்டுள்ளதுடன், பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் மூலம் இச்சேவைகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2020 பெப்ரவரி 06 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் அப/20/0045/217/001 அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இத்திணைக்களத்திற்கான 100,000 பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் பதவிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள இலக்குகளில் முன்னுரிமையாக அமைவது, நாடளாவிய ரீதியில் குறைந்தபட்ச கல்வித் தகமைகளுடன் கூடிய வறுமைப்பட்ட (வறுமையிலும் வறுமை கொண்ட) குடும்பங்களில் இளைஞர் யுவதிகள் 100,000 பேரைத் தெரிவு செய்து அவர்களுக்கு முறைசார்ந்த தொழிற் பயிற்சியை வழங்கி பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களாக அரச மற்றும் பகுதி அரச நிறுவனங்களில் ஆரம்பநிலை வெற்றிடங்களுக்கு சேவைகளின் தேவைகளுக்கேற்ப ஈடுபடுத்துவதாகும். இப்பணியானது தற்போது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், குறித்த தொழில் மட்டத்திலான உதவியாளர்கள் தேவைக்கேற்ப தனியார் துறை தொழில்களில் ஈடுபடுத்துவதற்கும், தேவையாயின் வெளிநாட்டு தொழில் சந்தைக்குப் பொருத்தமான வகையிலும் வலுவூட்டப்பட்டுள்ளனர்.

அத்துடன், மிகவும் குறுகிய காலத்தில் இத்திணைக்களத்தின் சேவைகள் அரச மற்றும் அரச முகவர் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு இயலுமை கிட்டியுள்ளதுடன், விசேடமாக, இத்திணைக்களத்திற்கு க.பொ.த (சா/த) கல்வி மட்டத்திற்கும் குறைவான கல்வித் தகமைகளைக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக குறைந்த கல்வி மட்டம் அல்லது தொழிற்கல்விக்கான வாய்ப்புக்கள் இழக்கப்பட்டவர்கள் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அதிகமான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்ற இவ்வயதில், உயர் கல்விக்கான வாய்ப்புக்கள் இழக்கப்பட்ட இளைஞர் யுவதிகளை அடையாளங்கண்டு திறன் விருத்திக்கான ஒத்துழைப்புக்களை வழங்கி தேசிய பொருளாதாரத்தில் முனைப்பான பங்காளர்களாக மாற்றுவதற்கு இத்திணைக்களம் பெரும் முயற்சி எடுத்து வருகின்றது.

மேலும், 2022 செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதிய அப/22/1353/605/011 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய அரச சேவையின் ஆட்சேர்ப்புச் செயன்முறை மீளாய்வுக் குழுவின் அறிவித்தலுக்கமைய, இத்திணைக்களத்தின் கீழ் தேசிய தொழிற்தகமை 3 ஆம் மட்டம் (NVQ 3) பூர்த்தி செய்துள்ள பயிலுநர்களுக்கு அரச மற்றும் அரச முகவர் நிறுவனங்களில் ஆரம்பநிலை சேவை வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1.2 தூரநோக்கு

"பெருமை மிகுந்த, ஒழுக்கமுள்ள, திறன்களுடன் கூடிய திருப்திகரமான இளைஞர் உழைப்புப் படை.."

1.3 பணிக்கூற்று

"குறைந்தபட்ச கல்வி வாய்ப்புக்கள் கிடைக்காத, குறைந்த வருமானங் கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு தரமான தொழிற்பயிற்சியை வழங்கி அவர்களை தேசிய பொருளாதார அபிவிருத்தியில் முனைப்பான பங்குதாரர்களாக உருவாக்கல்"


1.4 நோக்கம்

1. வறுமையால் உயர்கல்வி வாய்ப்புக்கள் கிடைக்காதவர்களுக்கு தரமான தொழிற் பயிற்சியை வழங்கி வேலை வாய்ப்புக்களை வழங்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஒத்துழைத்தல்
2. அரச துறையிலும் கூட்டிணைக்கப்பட்ட முகவர் நிறுவனங்களிலும் தனியார் துறையில் ஆரம்பநிலை சேவைப் பிரிவில் காணப்படும் சேவைகளின் தேவைகளுக்காக அதிக தரப்பண்புடன் கூடிய தகுந்த செலவு முகாமைத்துவத்துடன் கூடிய பயிற்றுவிக்கப்பட்ட உழைப்புப் படையை வழங்கல்.
3. பல்நோக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வறுமைப்பட்ட குடும்பங்களின் தொழில் மற்றும் வாழ்வாதாரங்களுக்கான ஒத்துழைப்புக்களை அதிகரித்து அவர்களை பொருளாதார அபிவிருத்தியில் முனைப்பான பங்குதாரர்களாக உருவாக்கல்.

1.5 பிரதான பணிகள்

1. அரச சொத்துக்கள் மற்றும் சிவில் செயற்பாடுகளுக்காக அரச முகவர் நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
2. காவல் பணிகள், பராமரிப்பு மற்றும் ஏனைய பணிகளில் பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு உதவி வழங்கல்.
3. டெங்கு மற்றும் ஏனைய தொற்று நோய்த் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சுற்றாடல் துப்பரவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
4. வனவிலங்குளின் அச்சுறுத்தல் காணப்படும் பிரதேசங்கள், சொத்துக்கள், கமநல சேவை வளங்கள் மற்றும் வாழ்வாதாரங்கள் போன்றவற்றை பாதுகாக்கும் செயலணியாக செயற்படுதல்.
5. இயற்கை அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல்
6. வன அதிகரிப்பு மற்றும் இயற்கைச் சூழல் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு வழங்கல்
7. கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி, உணவு களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் வழங்கல் சேவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல்
8. வீட்டுத்தோட்டம், பண்ணைகள் மற்றும் ஏனைய வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், வீடமைப்பு மற்றும் துப்பரவாக்கல் நடவடிக்கைகள் மேம்பாடுகளின் போது கொள்கைப் பிரகடனத்தை இலக்காகக் கொண்டு 100,000 குடும்பங்ளுக்கு ஒத்துழைப்பு வழங்கல்
9. விவசாயப் பண்ணைகள், காணி திருத்துதல் மற்றும் நிலத்தோற்ற அலங்காரம் மற்றும் உப ஒப்பந்தங்கள் போன்ற செயற்பாடுகளில் சிவில் பணிகளை மேற்கொள்ளல்.
10. கடலோரப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல்
11. சமூகப் பாதுகாப்பு வழங்குவதற்காக இராணுவம் மற்றும் பொலிஸ் சேவைகளுக்கு உதவி வழங்குவதற்காக குறைநிரப்பு சிவில் படையணியாக ஒத்துழைப்பு வழங்கல்
12. வர்த்தக ரீதியாக மேற்கொள்ளும் விவசாயப் பண்ணைகளை முகாமைத்துவம் செய்தல்
13. வெளிநாட்டவர்களை தொழிலில் அமர்த்தப்படுவதைக் குறைப்பதற்காக கட்டுமானப் பணிகளில் தொழிலாளர் வளங்களை வழங்கல்
14. விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அல்லது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் விசேட பணிகளில் ஈடுபடல்

1.6 நிறுவனக் கட்டமைப்பு



1.7 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் பணிகளை சரியான வகையில் மேற்கொள்ளும் நோக்கில் பிரதான பிரிவுகள் சிலவற்றின் கீழ் தலைமைக் காரியாலயத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

1.7.1 நிருவாகம் மற்றும் நடவடிக்கைகள் பிரிவு

நிருவாகம் மற்றும் செயற்பாட்டுப் பிரிவு திணைக்களத்தின் எதிர்கால செயற்பாடுகளுக்கு ஏற்புடைய கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கும், திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் நிறுவன ரீதியானதும் நிர்வாக ரீதியானதுமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இப்பிரிவால், திணைக்களத்தின் தலைமை அலுவலக உத்தியோகத்தர்கள், மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர்களின் இயலளவு விருத்தி பற்றித் தேடி ஆராயப்படும்.

1.7.2 கணக்குகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

கணக்குகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு திணைக்களத்தின் நிதிப் பயன்பாடு மற்றும் செலவு முகாமைத்துவம் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதற்கான பணிகளை எந்தளவுக்கு வெற்றிகரமாக மேற்கொள்ளகின்றன என்பதைத் தேடி ஆராய்தல்.

1.7.3 பயிற்சிப் பிரிவு

முக்கியமாக குறைந்தமட்ட கல்வித் தகமை கொண்ட கிராமிய இளைஞர் யுவதிகளை அடையாளங் கண்டு அவர்களைத் திணைக்களத்தில் பதிவு செய்து, தரநியமமான பயிற்சியை வழங்கி வேலைவாய்ப்பை வழங்குவதற்காக பொருத்தமானவர்களை உருவாக்கும் பொறுப்பை பயிற்சிப் பிரிவு கொண்டுள்ளது. அவ்வாறே பயிற்சிப் பிரிவுடன் 09 மாகாண அலுவலகங்களிலும் 25 மாவட்ட அலுவலகங்களிலும் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களை சேவையில் ஈடுபடுத்தல், நிருவாகம் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், ஆரம்பநிலை சேவை வெற்றிடங்களுக்குப் பொருத்தமானவர்களை அடையாளங் காண்பது இப்பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றது.

1.7.4 திட்டமிடல் பிரிவு

திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டம் தயாரித்தல், முன்னேற்றங்களைக் கண்காணித்தல் மற்றும் அறிக்கைப்படுத்தல் திட்டமிடல் பிரிவின் முக்கிய பணிகளாகும். அதேபோல் அரச நிறுவனங்கள் மற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்களின் ஆரம்பநிலை சேவை வெற்றிடங்களை அடையாளங் காணல், குறித்த வெற்றிடங்களுக்காக பயிற்சிப் பிரிவால் அடையாளங் காணப்படும் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களை அறிமுகப்படுத்தல்.

02. அத்தியாயம் - முன்னேற்றமும் எதிர்கால நோக்குகள்

2.1 விசேட அடைவுகள், சவால்கள் முன்னேற்றமும் எதிர்கால இலக்குகளும்

2.1.1 பயிலுநர்கள் பற்றிய சாராம்சம்

இலங்கையில் ஒரே தடவையில் முறைசார்ந்த பயிற்சியின் பின்னர் அதிகளவானோர் அரச சேவையில் இணைத்துக் கொள்கின்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அதற்கமைய, 2020 ஜனவரி மாதம் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் முதற்கட்டமாக 645,608 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன், நாடளாவிய ரீதியில் 332 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாக நேர்முகத் தேர்வு நடாத்தப்பட்டு பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் முதலாம் கட்டமாக 34.585 பேர் பயிலுநர்களாக நியமனம் வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் தகமை பெற்றவர்கள் 35,000 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் திட்டமிடப்பட்டாலும், அரச ஆலோசனையின் பிரகாரம் பயிலுநர்களை அதிகளவில் குறைக்க வேண்டி நேரிட்டது. குறிப்பாக காட்டு யானைகள் அச்சுறுத்தல்கள் காணப்படும் பிரதேசங்களில் யானை வேலிகளைப் பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் கொழும்பு மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களில் இன்னும் நிரப்பப்படாத ஆரம்பநிலை சேவை பணியாட்தொகுதியினரை ஆட்சேர்ப்பதற்கு திட்டமிட்டிருப்பினும், யானை வேலிகளைப் பராமரிப்பதற்காக 3,789 அபிவிருத்தி உதறியாளர்கள் இரண்டாம் கட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

இவ்விரண்டாம் கட்டத்திற்கான பயிலுநர்களுக்கு வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வளவாளர்களின் பங்கேற்புடன் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA) மூலம் "மின்சார வேலிப் பராமரிப்பு உதவியாளர்" எனும் தேசிய தொழில் தகமை மட்டம் 03 (NVQ 3) வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், தற்போது அவர்கள் தொழிற்பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், இத்திணைக்களத்தின் கீழ் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்து கொண்டுள்ள ஒட்டுமொத்த பயிலுநர்கள் 38,374 பேர்களின் 33 பேர் விசேட தேவையுடையவர்களாவதுடன், அவர்களும் தற்போது அரச மற்றும் அரச முகவர் நிறுவனங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

2022.12.31 திகதிக்கு பல்வேறு காரணங்கள் (ஒழுக்கக்கேடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் சேவையிலிருந்து விலகிச் செல்லல் போன்ற) 6593 பேர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன், 82 பேர் இறந்துள்ளனர். அதற்கமைய, 2022 ஆம் ஆண்டிறுதியில் திணைக்களத்தில் பணியாற்றுகின்ற பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் பயிலுநர்களின் எண்ணிக்கை 31,696 ஆகும்.

2.1.2 முதலாம் கட்டப் பயிற்சிகள் மற்றும் தொழில்களில் ஈடுபடுத்தலுக்கான சாராம்சம் - 2022.12.31 ஆம் திகதிக்கு

2020 ஜனவரி மாதம் மும்மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளப்பரத்தின் அளவுகோல்களுக்கமைய விண்ணப்பங்கள் நாடளாவிய ரீதியிலுள்ள பிரதேச செயலகங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நேர்முகத் தேர்வுகளை நடாத்தி மாவட்டச் செயலாளர்களின் பரிந்துரையின் கீழ் முதலாம் கட்டத்திற்குப் பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இப்பயிலுநர்கள் தேசிய பயிலுநர்

மற்றும் கைத்தொழிற் பயிற்சி 3 ஆம் மட்டம் (NVQ 3) பயிற்சி 06 மாதங்களில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இப்பயிற்சிகள் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையால் வழங்கப்பட்டது. பயிலுநர்களின் விருப்பம் மற்றும் திறமைகளுக்கமைய 25 துறைகளில் 34 பாடநெறிகளின் கீழ் பயிற்சிகள் வழங்குவதற்கு திட்டமிட்டதுடன், மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்ப உதவியாளர், குழாய் நீர் தொழிநுட்ப உதவியாளர், சாரதி, மேசன் உதவியாளர், ஒட்டுத்தொழில் உதவியாளர், தாதிமைப் பராமரிப்பு சேவை, விவசாய உற்பத்தி உதவியாளர் போன்ற தொழில்கள் அவற்றில் முதன்மையானவையாகும். பயிலுநர்களுக்கான திறன் பரீட்சை நடாத்தப்பட்டு அடையாளங் காணப்பட்ட திறன்களின் அடிப்படையில் குறித்த தொழில்கள் அமைடயாளங் காணப்பட்டதுடன், பின்னர் தலைமைத்துவ திறன் மற்றும் செயலூக்கப் பயிற்சிகள் வழங்கப்பட்டது. பின்னர் முதன்மையான தொழிற்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டதுடன், குறித்த வேலைத்தளப் பயிற்சிகளையும் கொண்டமைந்தது. 2022.12.31 ஆம் திகதியாகும் போது முதலாம் கட்டத்திற்கான ஒட்டுமொத்த பயிற்சிகளையும் பூர்த்தி செய்த பயிலுநர்கள் 31,000 பேர் NVQ 3 தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான தகமைகளைப் பூர்த்தி செய்துள்ளனர்.

விபரம்	எண்ணிக்கை (முதலாம் மற்றும் இரண்டாம் கட்டம்)
14 நாட்கள் ஆளுமை விருத்திப் பயிற்சியை பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை	36,716
சித்தாந்த ரீதியான பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை	36,784
வேலைத்தள தொழிற்பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை	36,126
NVQ 3 தகமையைப் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை	31,000 (மதிப்பீடு செய்யப்பட்டவாறு உள்ளன)

2021 ஆம் ஆண்டு ஆரம்பம் தொடக்கம் நாட்டில் நிலவிய கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக முதலாம் கட்ட பயிற்சி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன், குறித்த நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டியும் ஏற்பட்டது. மேலும் அரச நிறுவனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களுடன் இயங்கியமையால் குறித்த பயிலுநர்களின் வேலைத்தள தொழிற்பயிற்சிகளை மட்டுப்படுத்துவதற்கும் நேரிட்டது. கொவிட் பெருந்தொற்று நிலைமையிலும் கூட நடைமுறைப்படுத்தப்பட்ட அத்தியாவசிய சேவைகள் மற்றும் கூடுதலான அரச நிறுவனங்களில் தேவையாயிருந்த ஆரம்ப நிலை சேவைகளைத் துரிதமாகப் பூர்த்தி செய்வதற்காக அரச ஆலோசனையின் பிரகாரம் உதவியாளர்களின் பயிற்சித் துறைகளைக் கருத்தில் கொள்ளாமல் கடமையில் அமர்த்தப்பட்டனர். இவற்றுக்கிடையில் கொவிட் 19 பெருந்தொற்று தடுப்புப் பணிகளுக்காக நாடளாவிய ரீதியில் மருத்துவமனைகள், இடைத்தங்கல் தனிமைப்படுத்தல் நிலையங்களில் 3,000 பேர் வரை உதவியாளர்களாக பல்வேறு சுகாதார மற்றும் ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டதுடன், சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டிருந்த அளவுகோல்களைப் பின்பற்றி பெரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிருந்தனர்.





கொவிட் 19 பெருந்தொற்றுத் தடுப்புப் பணிகளில் ஈடுபடும் உதவியாளர்கள்

அதேபோன்று அரச முன்னுரிமை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தடைப்படாமல் தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்காக வீதி அபிவிருத்தி, குளங்கள் அணைக்கட்டுக்கள் புனரமைப்பு, சேதன உர உற்பத்தி போன்ற செயற்பாடுகளுக்கும் அதிகளவிலான பயிலுநர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் சுற்றாடல் மற்றும் கடலோரப் பாதுகாப்பு, தொல்லியல் பாதுகாப்பு போன்ற செயற்பாடுகளுக்காகவும் சேவைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து சமூக நல்லாரோக்கியத்தைப் பேணுவதற்காக போதைப்பொருள் தடுப்புப் பணிகள் மற்றும் இலங்கை பொலிசாரின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் வகையில் ஆரம்பநிலை சேவை அபிவிருத்தி உதவியாளர்கள் இத்திணைக்களத்தால் வழங்கப்பட்டது. அத்துடன் பாடசாலைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அவ்வாறான நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கும் தேவையான அபிவிருத்தி உதவியாளர்கள் பாடசாலைகளின் கோரிக்கைகளுக்கமைய கல்வி அமைச்சு மற்றும் மாகாண சபைகளின் உடன்பாட்டுடன் வழங்கப்பட்டது.

பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் பயிலுநர்கள் வேலைகளில் அமர்த்தப்பட்ட விபரம் - 2022.12.31 அன்று

	நிறுவனம்	இணைப்புச் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை
1	அமைச்சுக்கள்	437
2	திணைக்களங்கள்	14,808
3	மாகாண சபைகள்	9,035
4	நியதிச்சட்ட நிறுவனங்கள்	3,663
5	மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள்	2,730
	மொத்தம்	**30,673**

2.1.3 உள்ளக நிருவாகத்தை பலப்படுத்தல்

இத்திணைக்களம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதால், அதன் மனிதவளம் மற்றும் பௌதீக வளங்கள் ஒதுக்குதலும் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளும் சமாந்தரமாக மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக 100,000 பேரின் பயிற்சி, நிருவாகம் மற்றும் நலன்புரிச் சேவைகளைப் போலவே அவர்களை தொழிலில் அமர்த்துதல் மற்றும் குறித்த மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால், திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு அப்பால் மாகாண மட்டத்தில் 09 பணிப்பாளர்களும் மாவட்ட மட்டத்தில் உதவிப் பணிப்பாளர்கள் 25 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர். குறித்த மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்கள் தற்போது நிறுவப்பட்டு வருதுடன், அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவிலும் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக உயர்ந்தபட்சம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2.1.4 எதிர்கால நோக்கு

அமைச்சரவை தீர்மானத்திற்கமைய 2022.09.12அன்று தாபிக்கப்பட்டுள்ள அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு மீளாய்வுக் குழுவின் ஆலோசனைக்கமைய பயிற்சி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்துள்ள பயிலுநர்கள் அரச நிறுவனங்களில் ஆரம்பநிலை சேவைத் தரத்திற்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்வு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2.1.5 இத்திணைக்களத்தின் நோக்கங்களை அடைவதற்காக பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர் பயிலுநர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கள்

2.1.5.1 மரநடுகை மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு

இவ்வருடம் நடாத்தப்பட்ட 74 ஆவது சுதந்திர தினத்தையொட்டி எமது திணைக்களத்தின் மாகாண அலுவலகங்களின் தலைமையில் மரநடுகை மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்கீழ் ஊவா மாகாண அலுவலகத்தின் நெறிப்படுத்தலில் பதுளை மாவட்ட செயலகத்தின் பிரதேச செயலகங்களை மையப்படுத்தி மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. இவ்வேலைத்திட்டம் பதுளை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டதுடள், 1,000 மருது மரங்கள் நடுவதற்கான நடவடிக்கைகள் மற்றும் மரநடுகை நடவடிக்கைகள் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டது.





மரநடுகை வேலைத்திட்டம் - பதுளை மாவட்டம்

அத்துடன் சுதந்திர தினத்தை முன்னிட்டு வடமாகாண அலுவலகம் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், மாவட்டச் செயலாளரின் தலைமையில் "மரநடுகை நிகழ்ச்சித்திட்டம்" வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இங்கு மாவட்டச் செயலக வளாகத்திலும் பிரதான வீதியோரங்களிலும் மரக்கன்றுகள் நாட்டப்பட்டதுடன், அதற்காக பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களின் தளராத ஒத்துழைப்புக்கள் வழங்கப்பட்டன. மேலும் புத்தளம் மாவட்டத்தின் மஹவெவ பிரதேச செயலத்தில் இணைப்புச் செய்யப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தியார்கள் கடலோரப் பாதுகாப்பு மற்றும் ஊடுருவல் தாவரங்களை அகற்றும் நிகழ்ச்சித்திட்டமொன்று வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.



மரநடுகை வேலைத்திட்டம் யாழ்ப்பாண மாவட்டம்



கடலோரப் பாதுகாப்பு மற்றும் ஊடுருவல் தாவரங்களை அகற்றுதல் புத்தளம் மாவட்டம்

அத்துடன் அனுராதபுர மாவட்ட பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் சிறிய குளங்களை புனரமைப்பு செய்வதற்கும், காட்டு யானைகள் அதிகம் நடமாடும் பிரதேசங்களில் வீதிகள் தெருக்களை சுத்தப்படுத்தல் போன்ற முயற்சிகளில் ஈடுபட்டனர்.



காட்டு யானைகள் நடமாடும் பிரதேசங்களில் வீதிகளை சுத்தப்படுத்தல் அனுராதபுர மாவட்டம்



சிறிய குளங்கள் புனரமைப்பு அனுராதபுர மாவட்டம்

2.1.5.2 சப்பிரகமுவ மாகாணத்தில் வெள்ள அனர்த்தத்தால் இடருக்குள்ளாகிய மக்களுக்கு உதவியளித்தல்

இரத்தினபுரி மாவட்டத்தில் நிலவுகின்ற வெள்ள அனர்த்த நிலமைகளால் க.பொ.த (சா/த) பரீட்சை மண்டபங்களுக்கு செல்ல இயலாத மாணவர்களுக்கு வெள்ளத்தின் அக்கரைக்கு அழைத்துச் செல்வதற்கு பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் அரப்பணிப்புச் சேவைகளை வழங்கியுள்ளனர். அத்துடன், இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் வெள்ள அனர்த்தங்களுக்குள்ளாகிய குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கு அபிவிருத்தி உதவியாளர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர்.



வெள்ள அனர்த்தத்தால் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு செல்வதற்கு சிரமங்களை எதிர்கொண்ட மாணவர்களுக்கு ஒத்துழைப்பு



நிவாரண உதவிகளை வழங்கும் அபிவிருத்தி உதவியாளர்கள்

2.1.5.3 விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்கள்

பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் குறித்த மாகாணங்களில் பயிரிடப்படாத தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கைகளை வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளனர். இப்பணிகள் இரத்தினபுரி மாவட்டத்தின் கிரிஎல்ல மற்றும் கொலொன்ன பிரதேச செயலகப் பிரிவுகளில் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன், கிங்கங்கை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் மரநடுகைச் செயற்பாடுகளும் அபிவிருத்தி உதவியாளர்களால் மேற்கொள்ளப்பட்டன.





தரிசு நிலங்களிர் பயிரிடல் இரத்தினபுரி மாவட்டம்

2.1.5.4 இரத்ததான நிகழ்ச்சித்திட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் திணைக்களங்களில் பணிபுரிகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் சிவில் சமூக அமைப்புக்களை இணைத்துக் கொண்டு "இரத்ததான நிகழ்ச்சி" குறித்த பிரதேச செயலக வளாகத்தில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.





இரத்ததான நிகழ்ச்சித்திட்டம் யாழ்ப்பாண மாவட்டம்

2.1.5.5 டெங்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்காக ஒத்துழைத்தல்

டெங்கு நோய்க்காவியான நுளம்புகள் பெருகும் இடங்களை சோதனையிடல் மற்றும் சுத்தம் செய்தல் போன்ற பணிகள் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களால் மேற்கொள்ளப்பட்டன. இங்கு பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் ஏனைய கள உத்தியோகத்தர்களுக்கு உதவியளித்தமை முக்கியமானதாகும்.





டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் பதுளை மாவட்டம்

2.1.5.6 வீடமைப்புத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல்

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல பிரதேச செயலகப் பிரிவில் இணைப்புச் செய்யப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களின் ஒத்துழைப்பின் மூலம் குறைந்த வருமானங் கொண்ட குடும்பங்களுக்கான வீடமைப்பு பணிகள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது.





விடமைப்புப் பணிகளில் ஈடுபடுகின்ற உதவியாளர்கள் வலஸ்முல்ல பிரதேச செயலகப் பிரிவு

2.1.5.7 பல்நோக்கு அபிவிருத்தி விவசாயப் பண்ணை

மாத்தளை மாவட்டத்தில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் அத்துரலிய ஸ்ரீ நிவாசாராம விகாரையில் 3.5 ஏக்கர் காணியில் சேதனப்பசளையை பயன்படுத்தி மேற்கொள்கின்ற பயிர்ச்செய்கைகளின் அறுவடை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன், குறித்த அறுவடை நியாய விலையில் விற்பனை செய்யப்பட்டது.





அறுவடையில் ஈடுபடும் உதவியாளர்கள் ஸ்ரீ நிவாசாராம விகாரை

2.1.5.8 நெல் களஞ்சியப்படுத்தல் மற்றும் நெற்களஞ்சியப் பாதுகாப்பு

நெல் சந்தைப்படுத்தல் சபையின் வேண்டுகோளுக்கிணங்க பொலன்னறுவை மாவட்டத்தில் சேவையில் அமர்த்தப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் மாவட்டத்தில் நெல் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகளிலும், குறித்த நெற் களஞ்சியங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் பெரும் ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளனர்.

2.1.6 அடுத்த ஐந்தாண்டுகளுக்கான முன்னுரிமைகள் மற்றும் இலக்குகள்

- 2023 ஆண்டில் அரச கொள்கைத் தீர்மானத்திற்கமைய இத்திணைக்களத்தின் நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு இணையாக அனைத்துப் பயிலுநர்களையும் சேவையில் அமர்த்துவதற்கும், திணைக்கள அலுவலர்களை படிப்படியாக வேறு நிறுவனங்களுக்கு இணைப்புச் செய்வதற்கும், திணைக்களச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி சரியான வகையில் செயலாற்றுவதற்கும் திட்டமிடப்பட்டு வருகின்றது.
- தற்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள பயிலுநர்கள் பயிற்சியைப் பூர்த்தி செய்து NVQ 3 மட்டம் தேர்ச்சிச் சான்றிதழை வழங்குதல்
- வெற்றிகரமாக பயிற்சியைப் பூர்த்திசெய்த பயிலுநர்களுக்கு அரச சேவையில் ஆரம்பநிலை சேவை வெற்றிடங்களில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

2.1.7 சவால்கள்

- கொவிட் 19 தொற்று நிலைமையால் நாடளாவிய ரீதியில் மாவட்டத்திலுள்ள பயிலுநர்களுக்கான பயிற்சிகள் சுகாதார வழிகாட்டல்களுக்கமைய நடாத்த வேண்டியிருப்பதால் எதிர்பார்க்கப்படும் தினங்களில் பூர்த்தி செய்வதற்கு இயலாமை
- முதலாம் கட்ட பயிலுநர்களில் நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்ட சிலர் பயிற்சிக்கு சமூகமளிக்காதமையாலும், அடிப்படைப் பயிற்சி இடைநடுவில் நிறுத்தப்பட்டதாலும் சில மாவட்டங்களில் வெற்றிடங்களை நிரப்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை.
- இத்திணைக்களம் நாடளாவிய ரீதியில் இயங்கி வந்தாலும் தலைமைக் காரியாலயத்திலும் மாவட்டக் காரியாலயத்திலும் நிறைவேற்றுத்தர மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் அதிகமாக வெற்றிடமாகக் காணப்படுவதால் வினைத்திறனான சேவையை வழங்குவதில் தடைகள் உள்ளன.
- அரச ஆலோசனைகளுக்கமைய புதிய ஆட்சேர்ப்புக்களை மட்டுப்படுத்தியுள்ளமையால் அரச மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான ஆரம்பநிலை சேவைகளுக்காக உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் பிரச்சினைகள் தோன்றியுள்ளமை.

மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி **VSV** (ஓய்வுநிலை)
பணிப்பாளர் நாயகம்
பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்

03. அத்தியாயம் - 2022 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முழுமையான நிதிச் செயலாற்றுகை.

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	உண்மை நிலை 2021	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		163,584,000.00	236,912,000.00	ஏசீஏ-3
-	வைப்புகள்		27,750.00	83,875.87	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		14,232,875.53	13,098,963.40	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**177,844,625.53**	250,094,839.27	
	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		**177,844,625.53**	250,094,839.27	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		**2,549,908.51**	1,094,756,820.74	
-	**தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)**		**175,294,717.02**	(844,661,981.47)	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**				
13,593,540,000.00	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	8,554,940,833.86	9,318,023,612.61	
141,040,000.00	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	93,728,187.51	85,974,414.11	ஏசீஏ-2(ii)
1,800,000.00	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	2,137,246.51	1,510,420.64	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
13,736,380,000.00	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**8,650,806,267.88**	9,405,508,447.36	
	மூலதனம் செலவினம்				
3,000,000.00	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	280,973.95	3,192,158.90	
5,500,000.00	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	130,600.00	58,727,540.16	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
25,000,000.00	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
-	திறன் விருத்தி	14	40,152,295.16	90,050,904.53	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
33,500,000.00	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**40,563,869.11**	151,970,603.59	
	வைப்புக் கொடுப்பனவுகள்		27,750.00	83,875.87	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		35,507,742.00	8,935,959.40	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**35,535,492.00**	**9,019,835.27**	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		8,726,905,628.99	9,566,498,886.22	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		**(8,551,610,911.97)**	(10,411,160,867.69)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(8,551,610,911.97)	(10,411,160,867.69)	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3
			-	-	

K.J.L.C.Fernando
Chief Accountant
Department of Multipurpose
Development Task Force

3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31 ஆம் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	77,069,820.74	76,956,720.74
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	56,043,294.33	34,768,427.86
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**133,113,115.07**	**111,725,148.60**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		56,043,294.33	34,768,427.86
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		77,069,820.74	76,956,720.74
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	-	-
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**133,113,115.07**	**111,725,148.60**

பக்க இலக்கம் 07 முதல் 23 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 24 முதல் 41 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	~~பிரதான நிதி உத்தியோகத்தர்~~/ பிரதான கணக்காளர்
பெயர்:	பெயர்:	~~பணிப்பாளர்(நிதி)~~/ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி : 2023/02/23	திகதி : 2022/02/20	திகதி : 2023/02/20

Secretary
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government
Independence Square,
Colombo 07.

Maj Gen (Rtd) Nanda Mallawaarachchi VSV
Director General
Multi Purpose Development Task Force

K.J.L.C.Fernando
Chief Accountant
Department of Multipurpose Development Task Force

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	100,000.00
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	1,500.00
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	2,420,011.64	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	163,584,000.00	236,912,000.00
முற்பணங்களை அறவிடல்	1,638,716.00	11,250.00
வைப்புக்களின் பெறுகை	27,975.00	58,125.87
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**167,670,702.64**	**237,082,875.87**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	100,836,373.21	84,957,921.55
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	375,881.86	467,097.79
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	14,496,260.90	-
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	2,549,908.51	1,094,756,820.74
முற்பணக் கொடுப்பனவு	9,047,958.00	2,062,500.00
வைப்புக் கொடுப்பனவு	27,975.00	83,875.87
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**127,334,357.48**	**1,182,328,215.95**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**40,336,345.16**	**(945,245,340.08)**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி		1,094,549,460.28
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**-**	**1,094,549,460.28**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	40,336,345.16	149,304,120.20
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**40,336,345.16**	**149,304,120.20**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(40,336,345.16)**	**945,245,340.08**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**-**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**-**	**-**
கழ: - பகரநநதளகபபட கச:		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**-**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	**-**	**-**
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

K.J.L.C.Fernando
Chief Accountant
Department of Multipurpose
Development Task Force

3

3.4 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ - 2

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமான செலவினத்தின் சுருக்கம்

செலவின தலைப்பு இல :334 திணைக்களத்தின் பெயர் :பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்

ரூபா

வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல.	செலவினத் தலைப்பு	வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடு (1)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2)	நி.ஒ 66/69 மாற்றல்கள் (3)	மொத்தத் தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3)	மொத்தச் செலவினம் (5)	தேறிய பெறுபேறு மீதி/(மேலதிகம்) (6)=(4)-(5)
நிகழ்ச்சித் திட்டம் (1)	(1) மீண்டுவரும்	13,736,380,000.00	-	(15,200,000.00)	13,721,180,000.00	8,650,806,267.88	5,070,373,732.12
	(2) மூலதனம்	33,500,000.00	-	15,200,000.00	48,700,000.00	40,563,869.11	8,136,130.89
	உப மொத்தம்	13,769,880,000.00			13,769,880,000.00	8,691,370,136.99	5,078,509,863.01
நிகழ்ச்சித் திட்டம் (2)	(1) மீண்டுவரும்	-	-	-	-	-	-
	(2) மூலதனம்	-	-	-	-	-	-
	உப மொத்தம்	-	-	-	-	-	-
	முழு மொத்தம்	13,769,880,000.00	-	-	13,769,880,000.00	8,691,370,136.99	5,078,509,863.01

பிரதான நிதி உத்தியோகத்தர்/பிரதான கணக்காளர்/
~~பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)~~
திகதி :2023/02/20

K.J.L.C.Fernando
Chief Accountant
Department of Multipurpose
Development Task Force

ஏசீஏ - 2(i)

நிகழ்ச்சித்திட்டம் மூலமான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல :334 திணைக்களத்தின் பெயர் :பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்

செலவினக் குறியீடு	கருத்திட்டம் (1) ஏற்பாடுகள்				செலவினம்	கருத்திட்டம் (2) ஏற்பாடுகள்				செலவினம்	மொத்தச் செலவினம்
	செலவு ஏற்பாடு மதிப்பீட்டுஏற்பாடு (1)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2)	நி.ஒ 66/69 மாற்றல்கள் (3)	மொத்தத் தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3)	(5)	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு (6)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (7)	நி.ஒ 66/69 மாற்றல்கள் (8)	மொத்தத் தேறிய ஒதுக்கீடு (9)=(6)+(7)+(8)	(10)	(11)=(5)+(10)
மீண்டுவரும் செலவினம்											
ஆளுக்குரிய வேதனங்கள்											
1001 - சம்பளமும் கூலியும்	6,169,000,000.00		(1,000,000,000.00)	5,169,000,000.00	322,099,319.60						322,099,319.60
1002 - மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்	1,350,000.00			1,350,000.00	1,138,880.66						1,138,880.66
1003 - ஏனைய கொடுப்பனவுகள்	7,423,190,000.00		1,000,000,000.00	8,423,190,000.00	8,231,702,633.60						8,231,702,633.60
பிரயாணச் செலவினம்											
1101 - உள்ளூர்	20,000,000.00			20,000,000.00	17,518,776.35						17,518,776.35
வழங்கல்கள்											
1201 - எழுதுசுருவிகளும் அலுவலக உபகரணங்களும்	25,000,000.00		(3,150,000.00)	21,850,000.00	15,933,280.66						15,933,280.66
1202 - எரிபொருள்	4,800,000.00		5,075,000.00	9,875,000.00	9,658,635.46						9,658,635.46
1203 - உணவும் சீருடைகளும்	35,000,000.00		(18,175,000.00)	16,825,000.00	18,240.00						18,240.00
புதமாறிப்புச் செலவினங்கள்											
1301 - வாகனங்கள்	300,000.00		350,000.00	650,000.00	646,091.20						646,091.20
1302 - பொறி, இயந்திரம், உபகரணம்	815,000.00		(150,000.00)	665,000.00	345,215.28						345,215.28
1303 - கட்டடங்களும் கட்டமைப்புக்களும்	375,000.00		(200,000.00)	175,000.00	57,265.00						57,265.00
சேவைகள்											
1401 - போக்குவரத்து	18,000,000.00			18,000,000.00	12,417,366.66						12,417,366.66
1402 - தபால், தொலைத்தொடர்பு	1,700,000.00		600,000.00	2,300,000.00	2,251,057.19						2,251,057.19
1403 - மின்சாரமும் நீரும்	3,000,000.00		450,000.00	3,450,000.00	3,263,558.72						3,263,558.72
1404 - வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும்	30,850,000.00		335,000.00	31,185,000.00	31,181,200.00						31,181,200.00
1409 ஏனையவை	1,200,000.00		(677,250.00)	522,750.00	437,500.99						437,500.99
மாற்றங்கள்											
1506 - அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி	1,800,000.00		342,250.00	2,142,250.00	2,137,246.51						2,137,246.51
முழு மொத்தம்	**13,736,380,000.00**	-	**(15,200,000.00)**	**13,721,180,000.00**	**8,650,806,267.88**	-	-	-	-	-	**8,650,806,267.88**

ஏசீஏ - 2(i)

நிகழ்ச்சித்திட்டம் மூலமான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல :334 திணைக்களத்தின் பெயர் :பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்

செலவினக் குறியீடு	கருத்திட்டம் (1) ஏற்பாடுகள்				செலவினம்	கருத்திட்டம் (2) ஏற்பாடுகள்				செலவினம்	மொத்தச் செலவினம்
	செலவு ஏற்பாடு மதிப்பீட்டுஏற்பாடு (1)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2)	நி.ஒ 66/69 மாற்றல்கள் (3)	மொத்தத் தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3)	(5)	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு (6)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (7)	நி.ஒ 66/69 மாற்றல்கள் (8)	மொத்தத் தேறிய ஒதுக்கீடு (9)=(6)+(7)+(8)	(10)	(11)=(5)+(10)
மூலதனச் செலவினம்											
மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்											
2001 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	1,000,000.00			1,000,000.00	210,023.95						210,023.95
2003 - வாகனங்கள்	2,000,000.00			2,000,000.00	70,950.00						70,950.00
மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு											
2102-தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்	4,000,000.00			4,000,000.00	50,700.00						50,700.00
2103 - பொறி, இயந்திரம், உபகரணம்	1,500,000.00			1,500,000.00	79,900.00						79,900.00
மனித வள அபிவிருத்தி											
2401 - பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும்	25,000,000.00		15,200,000.00	40,200,000.00	40,152,295.16						40,152,295.16
முழு மொத்தம்	**33,500,000.00**		**15,200,000.00**	**48,700,000.00**	**40,563,869.11**						**40,563,869.11**
மொத்த மீளுவரும் மற்றும் மூலதனச் செலவினம்	**13,769,880,000.00**		**-**	**13,769,880,000.00**	**8,691,370,136.99**						**8,691,370,136.99**

*தொடர்புடைய செலவு விடய குறியீடுகளை மாத்திரம் உள்ளடக்க வேண்டும்.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி : 2023/02/20

K.J.L.C.Fernando
Chief Accountant
Department of Multipurpose
Development Task Force

ஏசீஏ-2(ii)

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 334 திணைக்களத்தின் பெயர் :பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்

ரூபா

செலவினக் குறியீடு	குறியீடு	ஏற்பாடுகள் நிதியிடல் (குறியீட்டு இல.)	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு (1)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2)	நி.ஒ 66/69 மாற்றல்கள் (3) (-)/+	மொத்தத் தேறிய ஏற்பாடு (4)=(1)+(2)+(3)	செலவினம் காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம் (5)	நி.ஒ. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால் /திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்) (6)	மொத்தச் செலவினம் (7)= (5)+(6)	தேறிய விளைவு சேமிப்பு / மிகை (8)=(4)-(7)	நிதித்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை (9)=(8)/(4)*100	வேறுபாட்டுக்கான காரணம்
மீளுவரும் செலவினம்												
நிகழ்ச்சித் திட்டம் (1)												
நிகழ்ச்சித் திட்டம்/கருத்திட்டம்/உப கருத்திட்டம்/ குறியீடு												
கூலி, சம்பளம் மற்றும் ஏனைய வழியுரி அலுவலர்கள் செலவு விடயதியான வகுப்பிடு ஆளுகைரிய வேதனங்கள்	5											
1001 சம்பளமும் கூலியும்		11	6,169,000,000.00		(1,000,000,000.00)	5,169,000,000.00	26,799,978.86	295,299,340.74	322,099,319.60	4,846,900,680.40	93.77	நிதி அமைச்சின் கட்டுப்பாடு காரணமாக பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நிரந்தரமாக்கலாம்.
1002 மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்		11	1,350,000.00			1,350,000.00	172,488.86	966,391.80	1,138,880.66	211,119.34	15.64	பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பயிற்சியினை நிறைவு செய்வதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மேலதிக நேர கொடுப்பனவை கட்டுப்படுத்தியமை.
1003 ஏனைய கொடுப்பனவுகள்		11	7,423,190,000.00		1,000,000,000.00	8,423,190,000.00	12,747,074.84	8,218,955,558.76	8,231,702,633.60	191,487,366.40	2.27	
மொத்தம்			13,593,540,000.00	-	-	13,593,540,000.00	39,719,542.56	8,515,221,291.30	8,554,940,833.86	5,038,599,166.14		
செலவு விடயரீதியான ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6											
பிரயாணச் செலவினம்												
1101 உள்நாடு			20,000,000.00			20,000,000.00	1,729,995.20	15,788,781.15	17,518,776.35	2,481,223.65	12.41	பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகர்களின் பயிற்சி நிறைவு காரணமாக வெளிக்கள பயணம் மிதான கட்டுப்பாடு
மொத்தம் (அ)			20,000,000.00	-	-	20,000,000.00	1,729,995.20	15,788,781.15	17,518,776.35	2,481,223.65		
வழங்கல்கள்												
1201 எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும்			25,000,000.00		(3,150,000.00)	21,850,000.00	1,552,212.60	14,381,068.06	15,933,280.66	5,916,719.34	27.08	பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகர்களின் நிரந்தர நியமன வகுதிகளுக்கு மதிப்பிடப்பட்ட செலவுகள் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.
1202 - எரிபொருள்			4,800,000.00		5,075,000.00	9,875,000.00	9,658,635.46		9,658,635.46	216,364.54	2.19	
1203 உடையும் சீருடைகளும்			35,000,000.00		(18,175,000.00)	16,825,000.00	18,240.00		18,240.00	16,806,760.00	99.89	பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகர்களின் சீருடைக்கு மதிப்பிடப்பட்ட செலவுகள் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.
மொத்தம் (ஆ)			64,800,000.00	-	(16,250,000.00)	48,550,000.00	11,229,088.06	14,381,068.06	25,610,156.12	22,939,843.88		
பராமரிப்புச் செலவினங்கள்												
1301 வாகனங்கள்			300,000.00		350,000.00	650,000.00	646,091.20		646,091.20	3,908.80	0.60	
1302 பொறி, இயந்திரம், உபகரணம்			815,000.00		(150,000.00)	665,000.00	284,194.08	61,021.20	345,215.28	319,784.72	48.09	ஏனைய சொத்துக்களை வாங்குதல் மற்றும் கட்டட பழுதுபார்த்தல் ஆகியவற்றிற்கான மதிப்பிடப்பட்ட செலவுகள் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.
1303 கட்டடங்களும் கட்டமைப்புக்களும்			375,000.00		(200,000.00)	175,000.00	7,160.00	50,105.00	57,265.00	117,735.00	67.28	
மொத்தம் (இ)			1,490,000.00	-	-	1,490,000.00	937,445.28	111,126.20	1,048,571.48	441,428.52		
சேவைகள்												
1401 போக்குவரத்து			18,000,000.00			18,000,000.00	12,382,966.66	34,400.00	12,417,366.66	5,582,633.34	31.01	நிதியமைச்சின் வழிகாட்டலின் படி செலவினம் மிதான கட்டுப்பாடு
1402 தபால், தொலைத்தொடர்பு			1,700,000.00		600,000.00	2,300,000.00	1,592,750.61	658,306.58	2,251,057.19	48,942.81	2.13	
1403 மின்சாரமும் நீரும்			3,000,000.00		450,000.00	3,450,000.00	2,844,333.85	419,224.87	3,263,558.72	186,441.28	5.40	
1404 வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும்			30,850,000.00		335,000.00	31,185,000.00	30,000,000.00	1,181,200.00	31,181,200.00	3,800.00	0.01	நிதியமைச்சின் வழிகாட்டலின் படி செலவினம் மிதான கட்டுப்பாடு
1409 ஏனையன			1,200,000.00		(677,250.00)	522,750.00	437,500.99		437,500.99	85,249.01	16.31	
மொத்தம் (ஈ)			54,750,000.00	-	707,750.00	55,457,750.00	47,257,552.11	2,293,131.45	49,550,683.56	5,907,066.44		
ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மொத்தச் செலவினம் (அ+ஆ+இ+ஈ)			141,040,000.00	-	(15,542,250.00)	125,497,750.00	61,154,080.65	32,574,106.86	93,728,187.51	31,769,562.49		

ஏசிஏ-2(ii)

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 334 — திணைக்களத்தின் பெயர் : பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்

ரூபா

செலவினக் குறியீடு	குறிப்பு	ஏற்பாடுகள்					செலவினம்			தேறிய விளைவு		
		நிதியீட்டல் (குறியீட்டு இல.)	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஒ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஏற்பாடு	காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம்	நி.ஒ. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால் /திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்)	மொத்தச் செலவினம்	சேமிப்பு / மிகை	திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை	வேறுபாட்டுக்கான காரணம்
			(1)	(2)	(3) (-)/+	(4)=(1)+(2)+(3)	(5)	(6)	(7)= (5)+(6)	(8)=(4)-(7)	(9)=(8)/(4)*100	
செலவு விடயரீதியான மாற்றங்கள், நன்கொடைகள், மானியங்கள் மாற்றங்கள்	7											
1505 அரசாங்க வழியமர்த்தலுக்கான உடமைக் கடன் வட்டி			1,800,000.00		342,250.00	2,142,250.00	338,631.86	1,798,614.65	2,137,246.51	5,003.49	0.23	
மொத்தம்			1,800,000.00	-	342,250.00	2,142,250.00	338,631.86	1,798,614.65	2,137,246.51	5,003.49		
செலவு விடயரீதியான வட்டிக் கொடுப்பனவுகள் மொத்தம்	8											
செலவு விடயரீதியான ஏனைய மீண்டெழும் செலவினம்	9											
மொத்தம்												
நிகழ்ச்சித் திட்டம் (1)												
முழு மொத்தம் (குறிப்பு 5 முதல் 9 வரை) மொத்த மீண்டெழும் செலவினம்			13,736,380,000.00	-	(15,200,000.00)	13,721,180,000.00	101,212,255.07	8,549,594,012.81	8,650,806,267.88	5,070,373,732.12	36.95	
மூலதனம் செலவினம்												
நிகழ்ச்சித் திட்டம் (1)												
பொது முதலீடுகளின் செலவு விடயரீதியான வகுப்பீடு												
மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10											
2001 கட்டடங்களும் கட்டமைப்புக்களும்			1,000,000.00			1,000,000.00		210,023.95	210,023.95	789,976.05	79.00	
2003 வாகனங்கள்			2,000,000.00			2,000,000.00	70,950.00		70,950.00	1,929,050.00	96.45	நிதிமுகாமைத்துவ வழிகாட்டலின் படி மூலதனம் செலவுகள் மீதான கட்டுப்பாடு
மொத்தம் (அ)			3,000,000.00	-	-	3,000,000.00	70,950.00	210,023.95	280,973.95	2,719,026.05		
மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11											
2102 தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும்			4,000,000.00			4,000,000.00	33,200.00	17,500.00	50,700.00	3,949,300.00	98.73	
2103 பொறி, இயந்திரம், உபகரணம்			1,500,000.00			1,500,000.00	79,900.00		79,900.00	1,420,100.00	94.67	நிதிமுகாமைத்துவ வழிகாட்டலின் படி மூலதனம் செலவுகள் மீதான கட்டுப்பாடு
மொத்தம் (ஆ)			5,500,000.00	-	-	5,500,000.00	113,100.00	17,500.00	130,600.00	5,369,400.00		

ஏசிஏ-2(ii)

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 334 — திணைக்களத்தின் பெயர் : பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்

ரூபா

செலவினக் குறியீடு	குறிப்பு	ஏற்பாடுகள்					செலவினம்			தேறிய விளைவு		
		நிதியீட்டல் (குறியீட்டு இல.)	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஒ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஏற்பாடு	காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம்	நி.ஒ. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால் /திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்)	மொத்தச் செலவினம்	சேமிப்பு / மிகை	திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை	வேறுபாட்டுக்கான காரணம்
			(1)	(2)	(3) (-)/+	(4)=(1)+(2)+(3)	(5)	(6)	(7)= (5)+(6)	(8)=(4)-(7)	(9)=(8)/(4)*100	
மூலதன மாற்றங்கள்	12											
மொத்தம் (இ)												
நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13											
2301 உரிமைப் பங்குக்கான பங்களிப்பு												
2302 மீள் கடன்கள்												
மொத்தம் (ஈ)												
மனித வள அபிவிருத்தி	14											
